தினகரன்
Dinakaran

வனத்துறை, பள்ளிக்கல்வித்துறை சார்பில்

# உலக ஓசோன் தினம் கொண்டாட்டம்

**கோவை, செப். 17:** கோவை வனத்துறை மற்றும்பள்ளிக்கல்வித்துறை சார்பில் உலக ஓசோன் தினத்தையொட்டி மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சிகள் நடந்தது.

கோவையில் உள்ள வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் சுற்றுச்சுழல் தகவல் பரப்பு மையத்தில் ஓசோன் தினம் நிகழ்ச்சி பேஸ்புக் லைவ் மூலம் நடந்தது. இதில், ஓசோன் குறித்த ஆன்லைன் விழிப்புணர்வு, வினாடி வினா, மாணவர்கள் மற்றும் அனைத்து தரப்பு மக்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில், சுமார் ஆயிரம் பேர் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சி சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் கவனத்தைப் ஈர்த்தது. நிகழ்ச்சியில், முதுநிலை விஞ்ஞானி கண்ணன் வாரியர் கூறுகையில்,"சமீபத்திய ஆய்வில் ஓசோன் அடுக்கு மீண்டு வருவதாக தெரிய வந்துள்ளது. மாண்ட்ரீல் நெறிமுறையைப் பின்பற்றினால் 2060-ல் ஓசோன் துளை மறைந்துவிடும்" என்றார்.

மேலும், உலக ஓசோன் தினம்2020 கருப்பொருளை சிறப்பிக்கும் ஒரு விழிப்புணர்வு சுவரொட்டி வெளியிடப்பட்டது. இந்த ஆன்லைன் நிகழ்வில் கோவையில் உள்ள மாநில வன சேவைக்கான மத்திய அகாடமியின் அலுவலர், பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர். ஆன்லைன் வினாடி வினா நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் மின் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. தவிர, பள்ளிக்கல்வித்துறையின் சுற்றுச்சூழல் மன்றத்தின் சார்பில் சிஇஓ அலுவலக வளாகத்தில் மரக்கன்று நடும் விழா நடந்தது. இதில், கல்வித்துறை அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

தினகரன் Thu, 17 September 2020
https://epaper.dinakaran.com/c/5501

223. News in Dinakaran, Coimbatore, 17.09.2020, Observance of World Ozone Day by IFGTB ENVIS.